

நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேதாரண்யம் நகரக் கழக செயலாளர் மா.மீ. புகழேந்தி குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி தலைஞாயிறு ஒன்றியத்தில் கழகத்திற்கு வாக்கு அளித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார் உடன் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார் மற்றும் பலர் உள்ளனர்.

### இந்திய அணுசக்தித் துறையில்

# தனியார் நிறுவனங்களுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் மோடி அரசு!

## தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்!

புதுடில்லி, மே 9-

இந்தியாவின் அணுசக்தித் துறையில் இது வரை இருந்துவந்த அரசின் முற்றுரிமையை உடைத்து, தனியார் மற்றும் அந்நிய நிறுவனங் களுக்குச் சிவப்புக் கம்பளம் விரிக்கும் அபாயகரமான நகர்வை மோடி அரசு மேற்கொண் டுள்ளது.

கடந்த ஆண்டு நிறைவேற்றப் பட்ட 'சாந்தி' சட்டத்தின் பின்னணியில், அமெரிக் காவின் உயர் மட்ட அணுசக்தித் தூதுக்குழுவினர் வரும் மே 17 முதல் 21 வரை இந்தியாவிற்கு வரவுள்ள செய்தி மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது.

**தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்**

பல பத்தாண்டுகளாக பொதுத்துறை நிறு வனங்களின் கட்டுப்பாட்டில் இருந்த அணு உலை இயக்கம் மற்றும் எரிபொருள் மேலாண்மை ஆகிய பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில், ரிலையன்ஸ், அதானி, டாடா போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதிப்பது என்பது தேசியப் பாதுகாப்பிற்கு இழைக்கப்படும் துரோகமாகும்.

'சாந்தி' சட்டத்தின் மூலம் 1962ஆம் ஆண்டு அணு சக்திச் சட்டம் மற்றும் 2010ஆம் ஆண்டு சிவில் அணுசக்தி இழப்பீட்டுச் சட்டம் ஆகியவை திருத்தப் பட்டுள்ளன. இதன் விளைவாக, ஒருவேளை அணு விபத்துகள் ஏற்பட்டால் உபகரணங்களை வழங்கிய விநியோகஸ்தர்கள் மற்றும் அவற்றை இயக்கும் தனியார் நிறு வனங்கள் ஏற்க வேண்டிய சட்டப் பூர்வப் பொறுப்பு முற்றிலுமாக நீர்த்துப்போகச் செய்யப் பட்டுள்ளது. இது இந்திய மக்களின் உயிரோடு விளையாடும் ஒரு ஆபத்தான சூதாட்டமாகும்.

**இலகு நீர் உலை தொழில் நுட்பம்**

மேலும், இந்தியா இது வரை சுயசார்புடன் கையாண்டு வந்த கனநீர் உலைத் (PHWR) தொழில் நுட்பத்தை ஓரங்கட்டி விட்டு, அமெரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகளின் லாபத்திற்காக இலகு நீர் உலை (LWR) தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்ய முனைவது நம்மை மீண்டும் அந்நிய சக்திகளிடம் அடகு வைக்கும் செயலாகும். உள்நாட்டுத் தொழில் நுட்பத்தில் மேம்பாடு காண்பதை விடுத்து, அமெரிக்காவின் வர்த்தக பேரசூதாட்டக் குழுக்களின் அழுத் தத்திற்குப் பணிந்து, கடன் சுமையை அதிகரிக்கும் இறக்குமதித் திட்டங்களை இந்தியா முன்னெடுப்பது பொருளாதார ரீதியாகவும் தற் கொலைக்குச் சமமானது.

குறிப்பாக, ஆந்திரா, மகாராட்டிரா மற்றும் குஜராத் மாநில முதலமைச்சர்களுடனும், இந்தியா வின் முன்னணி கார்ப்பரேட் நிறுவனங்களு டனும் அமெரிக்கத் தூதுக்குழு நடத்தவுள்ள ரகசியப் பேச்சுவார்த்தைகள், இந்திய அணு சக்தித் துறையை ஒரு வணிகச் சந்தையாக மாற்றும் சதியையே காட்டுகின்றன.

பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் விபத்து கால இழப்பீட்டு விதிகளில் செய்யப்பட்டுள்ள தளர்வு கள், தனியார் லாபத்திற்காக இந்திய குடிமக்க ளின் பாதுகாப்பை அட மானம் வைப்பதாகும். இந்தியாவின் அதி முக்கியத்துவம் வாய்ந்த அணுசக்தித் துறையில் அந்நிய முதலீடும், தனி யார் ஆதிக்கமும் ஊடுருவுவதை முற்போக்கு ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து வீரியத் துடன் எதிர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

### பேரிடர் மேலாண்மையில் ஒரு புதிய சகாப்தம்!

# சுனாமி அலைகளின் ரகசியம் கண்டுபிடிப்பு!

## விண்வெளியில் இருந்து படம் பிடித்து நாசா சாதனை!

வாஷிங்டன், மே 9-

கடல் என்றாலே மர்மம்தான். ஆனால், அந்த மர்மத்தை உடைத்து, சுனாமி அலைகளின் ரகசியத்தை விண்வெளியில் இருந்து துல்லியமாக படம் பிடித்து சாதனை படைத்திருக்கிறது நாசாவின் SWOT செயற்கைக் கோள். ரஷ்யாவின் கம்சட்கா அருகே ஏற்பட்ட நிலநடுக்கமும், தொடர்ந்து உருவான சுனாமியும் அறிவியலாளர்களுக்கு புதிய பாடத்தைக் கற்றுக்கொடுத்துள்ளது.

**சுனாமி அலை**

பொதுவாகச் சுனாமி வரும்போது, அதன் வேகத்தையும் உயரத்தையும் அளவிடுவது கடினமான காரியம். இதற்கு முன் இருந்த செயற்கைக் கோள்கள் மூலம் கடலின் ஒருசிறு பகுதியை மட்டுமே பார்க்க முடிந்தது. ஆனால், SWOT (Surface Water and Ocean Topography) செயற்கைக்கோள், அகலமான கோணத்தில் ஒட்டுமொத்த கடல் பரப்பையும் ஸ்கேன் செய்து, சுனாமி அலைகள் நகர்வதை ஒரு சினிமா போலப் படம்பிடித்துள்ளது. கடந்த ஜூலை 29இல், குரில்கம்சட்கா பகுதியில் ஏற்பட்ட 8.8 ரிக்டர் நிலநடுக்கத்தின் போதுதான் இந்த அபூர்வக் காட்சிகள் பதிவாகின.

இத்தனை காலமும் சுனாமி அலைகள் என்பது ஒரு பெரும் சுவர் போலச் சிதறாமல் நேராகப் பயணிக்கும் என்றுதான் நம்பப்பட்டது. ஆனால், இந்த புதிய தரவுகள் அந்த நம்பிக்கையைத் தகர்த்துள்ளன. சுனாமி அலைகள் ஒரே சீராகப் பயணிக்காமல், கடலில் நகரும்போது பல குட்டி குட்டி அலைகளாகப் பிரிந்து ஆற்றலைச் சிதறடிக்கின்றன (Wave Dispersion). இதன் மூலம், சுனாமி கரையைத் தொடும்போது நாம் எதிர்பார்த்ததை விட அதன் தாக்கம் மற்றும் நேரம் மாறக்கூடும் என்பது தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் இந்த நிலநடுக்கம் 300 கி.மீ நீளத்திற்குப் பிளவை ஏற்படுத்திய தாகக் கணிக்கப்பட்டது. ஆனால், செயற்கைக் கோள், கடலுக்கடியில் உள்ள DART மிதவை உணர்விகள் கொடுத்த தகவல்களை வைத்துப் பார்த்தபோது, அந்த நிலநடுக்க பிளவு 400 கி.மீ தூரம் வரை நீண்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டது. இது நிலநடுக்கத்தின் தீவிரத்தை நாம் இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. 1952இல் இதே பகுதியில் ஏற்பட்ட பேரிடருக்குப் பிறகுதான் நவீனச் சுனாமி எச்சரிக்கை அமைப்புகள் உருவாயின. இப்போது கிடைத்துள்ள இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றம், எச்சரிக்கை முறைகளில் புரட்சியை ஏற்படுத்தப் போகிறது. சுனாமி எந்த நேரத்தில் கரையைத் தொடும்? எவ்வளவு உயரத்தில் அலைகள் வரும்? போன்றவற்றை இனி மிகத் துல்லியமாகக் கணிக்க முடியும். இந்தச் செயற்கைக்கோள் தரவுகளை நேரடி கண்காணிப்பில் பயன்படுத்துவதன் மூலம், கடலோர மக்களுக்குச் சரியான நேரத்தில் எச்சரிக்கை வழங்கி ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

நமக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்த விஷயத்தை, புதிய தொழில்நுட்பம் பொய்யாக்கிப் புது உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. விண்வெளியில் இருந்து கடலை உற்று நோக்கும் இந்த முயற்சி, பேரிடர் மேலாண்மையில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியுள்ளது. இயற்கையின் சீற்றத்தை நம்மால் தடுக்க முடியாவிட்டாலும், நவீன அறிவியலின் துணையோடு அதன் பாதிப்பிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும் என்பதற்கு இந்த ஆய்வு ஒரு சிறந்த சான்று.

### தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம்:

# உச்சநீதிமன்றம் விசாரணையை ஒத்திவைக்க மறுப்பு!

புதுடெல்லி, மே 9 -

தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம் வேறு எந்த விவகாரத்தையும்விட முக்கியத்துவம் வாய்ந்தது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரதமர், மக்களவை எதிர்க் கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழு அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில், தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமிக்கவும், இந்த நடைமுறையை தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றம் இயற்றும் வரை பின்பற்றவும் கடந்த 2023ஆம் ஆண்டு மார்ச்சில் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

சட்டமன்றத்தைத் தொடர்ந்து அந்த ஆண்டு டிசம்பரில் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் நியமன சட்ட மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து மசோதா சட்டமானது.

இந்தச் சட்டத்தின்கீழ், தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும்குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி நீக்கப் பட்டார். இதற்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் ஜனநாயக சீர்திருத்தங்கள் சங்கம், லோக் பிரஹாரி ஆகிய தன்னார்வ அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை மற்றொரு நாளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று நீதிபதி தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வில், ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா புதன்கிழமை முறையிட்டார்.

ஆனால், வேறு எந்த விவகாரத்தையும் விட தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம் முக்கியமானது என்று தெரிவித்து, விசாரணையை ஒத்திவைக்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

### பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக

# பாகிஸ்தானில் அமெரிக்கத் தூதரகம் மூடல்!

வாஷிங்டன், மே. 9-

வடமேற்கு துன்கவா மாகாணத் தலைநகர் பெஷாவரில் உள்ள தனது துணைத்தூதரகத்தைப் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் படிப்படியாக மூடப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சரியான வளமேலாண்மைக்கும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விடுத்துள்ள அறிக்கையில், 'அமெரிக்க ஊழியர்களின் பாதுகாப்பே எங்களுக்கு மிக முக்கியம்.

பெஷாவர் துணைத் தூதரகம் மூடப்பட்டாலும், கைபர் பக்துன்கவா மாகாண மக்களுடனான பொருளாதார, பாதுகாப்பு ரீதியான உறவுகள் தொடர்ந்து நீடிக்கும். கைபர் பக்துன்கவா மாகாணத்துக்கான ராஜீய உறவுகள் இனி இஸ்லாமாபாதில் உள்ள அமெரிக்க தூதரகம் மூலம் மேற்கொள்ளப்படும். பாகிஸ்தானுடனான அமெரிக்காவின் கொள்கை முன்னுரிமைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. இஸ்லாமாபாத், கராச்சி, லாகூர் ஆகிய இடங்களில் உள்ள மற்ற தூதரகங்கள் வழியாக அமெரிக்கா - பாகிஸ்தான் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்ந்து வலுப்படுத்தப்படும்' என்று கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து ஊடுருவும் பயங்கர வாதிகள், இந்த எல்லை மாகாணத்தில் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்கள் இருநாட்டு மோதலாக வெடித்தது. எனினும், தொடரும் பயங்கரவாதத் தாக்குதல்களால் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருதி தூதரகத்தை மூடுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

### பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிகபட்சமாக கணினி அறிவியல் பாடத்தில்

# 7 ஆயிரம் மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்!

சென்னை, மே 9 -

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிகபட்சமாக கணினி அறிவியல் பாடத்தில் 6 ஆயிரத்து 945 மாணவர்களும் குறைந்த பட்சமாக விலங்கியல் பாடத்தில் 18 மாணவர்களும் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

தமிழ்ப் பாடத்தில் 83 பேரும் ஆங்கிலத்தில் 21 பேரும், இயற்பியல் பாடத்தில் 105 பேரும், வேதியியல் பாடத்தில் 632 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

உயிரியல் பாடத்தில் 784 பேரும் கணிதப் பாடத்தில் 732 பேரும் தாவரவியலில் 31 பேரும் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

வணிகவியலில் 683 பேரும் கணக்குப் பதிவியலில் 1,946 பேரும் பொருளியலில் 440 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ள னர்.

வரலாறு பாடத்தில் 282 பேரும் கணினிப் பயன்பாடுகள் பாடத்தில் 2 ஆயிரத்து 99 பேரும் வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் பாடத்தில் 463 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

இவற்றில் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் 16 ஆயிரத்து 24 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர். அதேபோல், அரசுப் பள்ளி மாணவர்களில் ஆயிரத்து 695 பேர் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

### அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த

# 10% கூடுதல் வரி, சட்டவிரோதம்!

## அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு!

வாஷிங்டன், மே 9 -

அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த 10% கூடுதல் வரி , சட்டவிரோதம் என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பல்வேறு நாடுகளின் பொருட்களுக்கு அமெரிக்க, அதிபர் டிரம்ப் 10 சதவீதம் வரியை விதித்திருந்தார். அமெரிக்க வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பால் டிரம்ப்புக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

# மம்தா பானர்ஜியுடன் அகிலேஷ் யாதவ் சந்திப்பு!

கொல்கத்தா, மே 9-

தேர்தல் ஆணையத்துடன் பா.ஜ.க. கைகோர்த்துக் கொண்டு தேர்தல் முடிவுகள் என்னவென்று முதலில் தெரிந்துகொண்டு பின்னர், வெற்றிச் சான்றிதழ் வழங்கப்படுவதாக சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜியை சந்தித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அகிலேஷ், போராட்டக் குணம் கொண்டவராகவும், துணிச்சலுடன் களமாடுபவராகவும் மம்தா திகழ்கிறார் என்றும், அவர் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கப்போவதில்லை எனவும் கூறினார்.

நாட்டின் மக்கள் தொகையில் சரிபாதி பங்கை கொண்ட பெண்களின் பிரதிநிதியாக திகழ்வதால், பா.ஜ.க. வினருக்கு பெரும் சவாலாக இருக்கிறார், ஆணாதிக்கம் கொண்ட பா.ஜ.க. தலைவர்களால், ஒரு பெண் உயர்ந்து வருவதை சகித்துக்கொள்ளவே முடிவதில்லை எனவும் அவர் விமர்சித்தார்.

பா.ஜ.க. ஆட்சியின் கீழ், தேர்தல் நடைமுறைகள் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அகிலேஷ் விமர்சித்தார். தேர்தல் ஆணையத்துடன் பா.ஜ.க. கைகோர்த்துக் கொண்டு தேர்தல் முடிவுகள் என்னவென்று முதலில் தெரிந்துகொண்டு பின்னர், வெற்றிச் சான்றிதழ் வழங்கப் படுவதாகவும் அகிலேஷ் குற்றம் சாட்டினார்.

### மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதி - வங்கக்கடல் பகுதிகளில்

# காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு!

டெல்லி, மே 9-

மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் மே 17,18 தேதி வாக்கில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு எனவும் வங்கக் கடல் பகுதிகளில் மே 13, 16 தேதி வாக்கில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு எனவும் இந்திய வானிலை மையம் கணித்துள்ளது.

# உக்ரைன் போர் நிறுத்த நாளில் ரஷியா தாக்குதல்!

## 27 பேர் உயிரிழப்பு!

கீவ், மே. 9–

உக்ரைன் தன்னிச்சையாக அறிவித்து கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த போர் நிறுத்தத்தை நிராகரித்து, அந்நாட்டு நகரங்களைக் குறிவைத்து ரஷியா 100க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், ட்ரோன்களை ஏவி புதன்கிழமை தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் 27 பேர் உயிரிழந்ததாகவும், 120க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் உக்ரைன் உள்துறை அமைச்சர் இஹோர் கிளிமென்கோ தெரிவித்துள்ளார்.

2ஆம் உலகப் போரில் ஜெர்மனியின் வீழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், ரஷியா 8, 9 ஆகிய தேதிகளில் போர்நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால், அதற்கு முன்னதாக உக் ரைன் அறிவித்த போர் நிறுத்தத்தை ரஷியா சீர்குலைத்திருப்பது அதன் உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாக உக்ரைன் விமர்சித்துள்ளது. அமைதிக்கான உக்ரைனின் முன்னெடுப்புகளை ரஷியா மீண்டும் ஒருமுறை உதாசீனப்படுத்தியுள்ளதாக உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹா கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறுகையில், 'புதின் மனித உயிர்களை விட ராணுவ அணிவகுப்புகளுக்கே முக்கியத் துவம் அளிக்கிறார். ரஷியாவின் இத்தகைய போக்கைக் கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் புதிய தடைகளை விதிக்க வேண்டும். உக்ரைனுக்குத் தேவையான ராணுவ உதவிகளை அதிகரிக்க வேண்டும்' எனக் கோரிக்கை விடுத்தார்.

**பரஸ்பரம் குற்றச்சாட்டு!**


உக்ரைன் தனது போர்நிறுத்த உறுதிமொழியைப் பின்பற்றவில்லை என்று ரஷிய பாதுகாப்பு அமைச்சகமும் குற்றஞ் சாட்டியுள்ளது.

ரஷிய வான்பரப்பில் உக்ரைனின் 53 ட்ரோன்களைத் தங்களின் வான்பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதாக ரஷியா தெரிவித்துள்ளது. கிரீமியாவின் ஜன்கோய் நகரில் உக்ரைன் நடத்தியட்ரோன் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததாக ரஷிய ஆதரவு ஆளுநர் செர்ஜி அக்சி யோனோவ் குறிப்பிட்டுள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.இராமநாதன்

### மே 9 (2019)



தனது பள்ளிப்பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்ட இவர், கழகம் துவங்கியோது தன்னை இணைத்துக் கொண்டு, தனது பேச்சாற்றலால் இயக்க கொள்கைகளை 58 ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் பரப்பி, கழகம் வளர பாடுபட்டவர்.

கழகத்தில் பொதுக்குழு உறுப்பினராகவும் – கோவை மாநகரச் செயலாளராகவும் – சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினராகவும் – தணிக்கைக்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராவும் – நாடாளுமன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் தொடங்கிய அடுத்த ஆண்டிலேயே இரயில் நிலையங்களில் இந்தி எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் போராட்டம் – 1965ல் இந்தி எதிர்ப்பு போராட்டம் – 1976ல் நெருக்கடிகால மிசா சட்டத்தில் 14 மாத கால சிறைவாசம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

1992ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் "அண்ணா விருது"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டது. "திராவிட இயக்கத்தினுடைய ஒரு மிகப்பெரிய பல்கலைக்கழகமாக விளங்கிய இவர், தன்னுடைய கடைசி மூச்சு நிற்கும் வரையிலும், கழகம் – கழகம் – கழகம், கலைஞர் – கலைஞர் – கலைஞர் என்ற நிலையில் தான் வாழ்ந்து காட்டியிருக்கின்றார். அவருடைய மறைவு ஒட்டுமொத்த திராவிட இயக்கத்திற்கும், தி.மு.கழகத்திற்கும் ஒரு மிகப்பெரிய இழப்பாகும்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.